**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 -ம் நாள் வெள்ளிக்கிழமை**

**2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 13-ம் நாள்**

**CC. No.78 of 2025**

**(CNR No.TNVP10-00469-2025)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C.No.78/2025 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>திண்டிவனம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 787/2021,<br>இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(1) |
| 3 | எதிரிகளின் விவரம் | | 1. ராஜேந்திரன், வயது 34,<br>த/பெ வேலாயுதம்,<br>நெ.111, பள்ளி தெரு,<br>வட ஆலப்பாக்கம் கிராமம்,<br>திண்டிவனம் வட்டம் |
| | | | 2. ராஜ்குமார், வயது 31,<br>த/பெ வேலாயுதம்,<br>நெ.111, பள்ளி தெரு,<br>வட ஆலப்பாக்கம் கிராமம்,<br>திண்டிவனம் வட்டம் |
| 4 | சம்பவ தேதி | : | 14.06.2021 |
| 5 | முறையீடு | : | 14.06.2021 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:03:41 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | 14.06.2021 to 18.06.2021=5 days | | |
| 7 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 21.03.2025 | | |
| 8 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 05.01.2026 | | |
| 9 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 10 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 02.02.2026 | 20.02.2026 |
| | | | PW-2 | 02.02.2026 | 20.02.2026 |
| | | | PW-3 | 06.02.2026 | 06.02.2026 |
| | | | PW-4 | 06.02.2026 | 06.02.2026 |
| | | | PW-5 | 09.03.2026 | 09.03.2026 |
| | | | PW-6 | 23.03.2026 | 23.03.2026 |
| 11 | பிரிவு 351(1)(பி) BNSS ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 24.03.2026 | | |
| 12 | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 13 | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.03.27 17:03:50 +0530

| | | | |
|---|---|---|---|
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(1)- ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 323, 353 ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ |

இவ்வழக்கானது கடந்த 21.03.2025-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 24.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ரூபாகரன்,M.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

திண்டிவனம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடமான திண்டிவனம் மதுவிலக்கு அமல் பிரிவில் அரசு வாகன ஓட்டுனராக பணிபுரியும் சாட்சி - 1 சிவக்கொழுந்து என்பவர் 14.06.2021 ம் தேதி மாலை சுமார் 17.45 மணிக்கு நிலைய பணி அலுவலராக சென்று மீண்டும் வட ஆலப்பாக்கம் ரோட்டில் உள்ள மதுவிலக்கு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:04:04 +0530

அமல்பிரிவு அலுவலகம் வரவேண்டி PY 01 CM 5861 பல்சரில் வந்து வலது பக்கமாக மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய செல்ல இன்டிகேட்டர் போட்டு திரும்பும்போது சாட்சி -1 க்கு பின்னால் PY 01 CM 5512 என்ற எண்ணுள்ள அவென்ஜர் இரு சக்கர வாகனத்தில் வந்த 1வது எதிரி ராஜேந்திரன் சாட்சி -1யை பார்த்து போடா தேவிடியா பையா என தகாத வார்த்தையால் திட்டியுள்ளார். அதற்கு சாட்சி -1 தான் போலீஸ் தாம்பா இன்டிகேட்டர் போட்டுதான் திரும்பினேன் என்று சொன்னதற்கு எதிரியானவர் வண்டியவிட்டு கீழே இறங்கி வந்து போலீஸ்னா பெரிய பூலா என அசிங்கமாக திட்டி சாட்சி -1ன் கழுத்தை பிடித்து நெட்டித்தள்ளி சாட்சி -1 கீழே விழுந்தவுடன் அவர் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு கழுத்தை நெறித்து செத்து ஒழிந்துபோடா என்று மிரட்டியும் அங்கு வந்த 2வது எதிரி ராஜ்குமார் என் அண்ணனையே அடிப்பையாடா என்று கையாலும், காலாலும் மாறி, மாறி எட்டி உதைத்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்ததாக 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(i) ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 323, 353 ன்படி திண்டிவனம் காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(1)- ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 323, 353-ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:04:14 +0530

3) எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230-BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(1)- ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 323, 353 ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் அவற்றை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**

- காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் குறித்தும் புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.
- கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட காவலர்கள் அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளனர்.
- கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.4, அ.சா.5 ஆகியோர் சம்பவம் பற்றி தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:04:22 +0530

- ➔ காவல் உதவி ஆய்வாளர் அ.சா.6 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் பிரிவு 351(1)(ஆ)-ன் BNSS படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8) **<u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(1)- ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 323, 353 ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9. வாய்மொழி வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10. அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன் வைக்கப்படவில்லை.

11. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் காவலர்கள் சம்பவம் குறித்து முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். தனிநபர்கள்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:04:32 +0530

சாட்சிகளான அ.சா.4, அ.சா.5 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.1 சம்பவ சமயத்தில் பணியில் இருந்ததற்கான ஆவணம் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. வாகனத்தில் செல்லும்போது ஏற்பட்ட தகராறின்போது அ.சா.1 அதிகார தோரணியில் பிரச்சனை செய்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளார். எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;**

வழக்கில் காயம் பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திரு. சிவக்கொழுந்து** அவரது சாட்சியத்தில் கடந்த 2021 ஆம் வருடம் திண்டிவனம் மது விலக்கு பிரிவில் ஆய்வாளருக்கு வாகன ஓட்டுனராக இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்த போது 14.06.2021 மாலை 5.30, 5.45 மணியளவில் தான் மதுவிலக்கு பணியாக PY 01 CM 5861 பல்சர் வாகனத்தில் வட ஆலப்பாக்கம் ரோட்டில் இருந்து திரும்பும் போது PY 01 CM 5512 Avenger வாகனத்தில் 1வது எதிரி ராஜேந்திரன் வலது பக்கமாக முந்தி சென்று எனவும், அப்பொழுது அ.சா.1 கேட்டபோது 1வது எதிரி போலீஸ்னா பெரிய பூலா என தனது சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளினார் எனவும், அப்போது அங்கு வந்து இரண்டாவது எதிரி அசிங்கமாக பேசி இடது பக்க கன்னத்தில் கையால் அடித்து உதட்டின் அருகே காயம் ஏற்பட்டதாக முன் சம்பவம் பற்றி கேள்விப்பட்டார். அ.சா.2, அ.சா.3 ஆகியோர் வந்து சண்டையை மறித்தார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:04:39 +0530

பெற்றுக் கொண்டு திண்டிவனம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 சம்பவ இடம் கலால் காவல் நிலையத்தில் இருக்கும் ரோட்டுக்கும் வட ஆலப்பாக்கம் ரோட்டுக்கும் இடையே உள்ள வளைவில் நடந்தது எனவும், சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்ல 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் எனவும், 20 நிமிடம் ஆனது எனவும் மருத்துவமனையில் இருந்து திண்டிவனம் நகர காவல் நிலையம் வர 5 km இருக்கும் எனவும், சுமார் கால் மணி நேரம் ஆனதாகவும், தான் மருத்துவமனையில் ¼ மணி நேரம் சிகிச்சையில் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். சம்பவ சமயத்தில் தானும், அ.சா.2-ம் சீருடை இல்லை எனவும், தனது வாகனத்தை முந்தும் போது தான் பிரச்சினை ஏற்பட்டதாகவும், இருவருக்கும் இடையே வாக்குவாதத்தின்போது கும்பலாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

13. கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட திண்டிவனம் மதுவிலக்கு அமல் பிரிவு தலைமை காவலர் **அ.சா.2 திரு. முருகையா** அவரது சாட்சியத்தில் கடந்த 14.06.2021 மாலை 5:45 மணியளவில் தான் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது அ.சா1. வெளியே சென்று திரும்பி வரும்போது எதிரிகள் பிரச்சினை செய்து தகாத வார்த்தை இல்லாத திட்டி அவரை பிடித்த கீழே தள்ளி மேலே ஏறி உட்கார்ந்து கழுத்தை பிடித்து நெறித்தார் எனவும், தானும், அ.சா.3 -ம் அலறல் சத்தம் கேட்டு வந்து சண்டையை விலக்கி விட்டதாகவும், அடிபட்ட அ.சா.1-யை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். எதிரிகள் தரப்பு குறுக்கு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:04:46 +0530

விசாரணையில் அ.சா.2 சம்பவ சமயத்தில் தான் சிவில் உடையில் இருந்ததாகவும், காவல்துறை சீருடையில் இல்லை எனவும், தான் சத்தம் கேட்டு தானும், அ.சா.3-ம் ஒன்றாக சென்றதாகவும், காயம்பட்ட அ.சா.1-டன் தான் மருத்துவமனைக்கு சென்றதாகவும், இடைப்பட்ட காலத்தில் காவல் நிலைய பாராவை வேறு போலீசார் பார்த்துக் கொண்டார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

14. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட திண்டிவனம் மதுவிலக்கு பிரிவு தலைமை காவலர் **அ.சா.3 திரு.சிவகுமார்** அவர்களது சாட்சியத்தில் சம்பவ சமயத்தில் காவல் நிலையத்தில் பணியில் இருந்ததாகவும், சத்தம் கேட்டு தானும், அ.சா.2 சென்றபோது அ.சா.1 க்கும், 1வது எதிரிக்கும் சண்டை நடந்தது எனவும், சண்டையை நிறுத்தி விசாரித்து கொண்டிருந்தபோது இரண்டாவது எதிரி வந்து அ.சா.1-யை கையாலும், காலாலும் தாக்கினார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.3 தான் அ.சா.1-டன் மருத்துவமனைக்கு சென்றதாகவும், நகர காவல் நிலையத்திற்கு செல்லவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

15. கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.4 திரு ராமதாஸ், அ.சா.5 திரு. பாபு** ஆகியோர் வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என குறிப்பிட்டுள்ளனர். அ.சா.4, அ.சா.5 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.4, அ.சா.5 ஆகியோர் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:04:52 +0530

செய்யப்பட்டுள்ளனர் எனினும் அரசு தரப்பு வழக்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை.

16. கடந்த 14.06.2021 மாலை 5:45 மணி அளவில் வட ஆலப்பாக்கம் ரோட்டில் இருந்து மதுவிலக்கு அமல் பிரிவு அலுவலகம் அருகே அ.சா.1 இருசக்கர வாகனத்தில் திரும்பிய போது அவருக்கு பின்னால் வந்த 3 வது எதிரி அ.சா.1-யை தகாத வார்த்தைகளால் திட்டி கீழே தள்ளி அவர் மீது உட்கார்ந்து கழுத்தை பிடித்து நெறித்தார் எனவும், அங்கு வந்த 2 வது எதிரியும், அ.சா.1-யை கையாலும், காலாலும் மாறி மாறி எட்டி உதைத்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி பணி செய்ய விடாமல் தடுத்தார்கள் என்பது அரசு தரப்பு வழக்காகும் . காயம்பட்ட அ.சா.1 சம்பவ சமயத்தில் 1வது எதிரி தகாத வார்த்தைகளால் திட்டி கீழே தள்ளினார் எனவும், 2 வது எதிரி கன்னத்தில் அறைந்ததில் தனக்கு உதட்டில் காயம் ஏற்பட்டதாகவும், அ.சா.2, அ.சா.3 சண்டையை மறித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். காவல் நிலையம் அருகே சத்தம் கேட்டு அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று சண்டையை மறித்ததாக குறிப்பிட்டுள்ளனர். அ.சா.2 சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது எதிரிகள் அ.சா.1-யை அடித்துக்கொண்டு இருந்தார்கள் என குறிப்பிட்டுள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்ற போது 1வது எதிரியும், அ.சா.1-ம் சண்டை போட்டுக் கொண்டிருந்தார் எனவும், சண்டையை மறித்துக் கொண்டிருந்தபோது இரண்டாவது எதிரி வந்து அ.சா.1 -யை அடித்ததாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 க்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டில்

ELAVARASI
Digitally signed by ELAVARASI
Date: 2026.03.27 17:05:00 +0530

14.06.2021 மாலை 5 மணி அளவில் அ.சா.1 தன்னிச்சையாக மருத்துவமனைக்கு வந்ததாகவும், அவரை அன்றைய தினமே இரண்டு தெரியாத நபர்கள் திண்டிவனம் மதுவிலக்கு கையால் தாக்கியதாகவும், அ.சா.1 க்கு கீழ் உதட்டில் குத்து காயமும் வலது கன்னத்தில் குன்றிய காயமும் இருந்ததாகவும், அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

17. புகாரில் 1வது எதிரி சம்பவ சமயத்தில் அ.சா.1 மீது உட்கார்ந்து கழுத்தை நெரித்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், அ.சா1 சம்பவ சமயத்தில் 1வது எதிரி தகாத வார்த்தைகளால் திட்டி கீழே தள்ளியதாக மட்டும் குறிப்பிட்டுள்ளார். சத்தம் கேட்டு வந்ததாக குறிப்பிட்டுள்ள அ.சா.2, அ.சா.3 ஆகியோர் அவர்கள் செல்லும்போது யார், யார் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது குறித்து முரண்பட சாட்சியமளித்துள்ளனர். ஒரு சில குடியிருப்புகள் இருந்த போதிலும் அவர்கள் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. தனிநபர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.4, அ.சா.5 ஆகியோர் சம்பவம் பற்றி எந்த விவரமும் தெரியாது என குறிப்பிட்டுள்ளனர். சம்பவ சமயத்தில் அ.சா.1 பணியில் இருந்ததற்கான ஆவணம் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. சம்பவ சமயத்தில் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் சீருடை இல்லை என குறிப்பிட்டுள்ளனர். மேலும் சம்பவத்தால் அ.சா.1 ன் பணி என்ன பாதிக்கப்பட்டது என்பது குறித்து எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை. எனவே மேற்படி காரணங்களினால் சம்பவம் குறித்து சந்தேகிக்கும் வகையில் உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது .

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:05:07 +0530

18. இவ்வழக்கில் பார்வை மகசர் சாட்சிகளாக பட்டியலிடப்பட்டுள்ள ரவி மற்றும் கேசவன் ஆகியோர்களை கண்டுபிடிக்க இயலவில்லை என திண்டிவனம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே பட்டியல் சாட்சி 6, 7 ஆகியோர் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை.

19. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி **அ.சா.6 திரு. ஆனந்தராசன் காவல் உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 14.06.2021 மாலை 5 45 மணியளவில் தான் திண்டிவனம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது மதுவிலக்கு அமல் பிரிவு காவலர் அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த கொடுத்த புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே 7 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்றைய தினமே இரவு 8.30 மணியளவில் திண்டிவனம் மேம்பாலத்தின் கீழ் சென்னை பேருந்து நிறுத்தம் அருகே இருந்த எதிரிகளை சாட்சிகள் அடையாளம் காட்ட எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விசாரித்து காயச்சான்று பெற்றுள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்துக் கொண்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(1) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

20. எதிரிகள் தப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.6 சம்பவ சமயத்தில் அ.சா.2

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:05:14 +0530

காவல் நிலையத்தில் நிலைய பாராவில் இருந்ததாகவும், அ.சா.3 நிலையஎழுத்தராக இருந்ததாகவும், அந்த காவல் நிலையத்தில் பொறுப்பு அதிகாரி உதவி ஆய்வாளர் நடராஜன் என்பவரை வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை எனவும், சம்பவ சமயத்தில் அவர் ரெய்டுக்கு சென்று இருந்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார். சம்பவத்தன்று சாட்சிகள் பணியில் இருந்ததற்கான ஆவணங்கள் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. காவல் நிலையத்தில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் சம்பவ இடம் உள்ளது முதல் தகவல் அறிக்கையில் 13.06.2021 என தட்டச்சுப் பிழையாக தேதி குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், இவ்வழக்கில் இரு சக்கர வாகனம் கைப்பற்றப்படவில்லை எனவும், சம்பவம் நடந்து 45 நிமிடத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

21. காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும், புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சிகளான காவலர்கள் அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளனர். சம்பவம் குறித்து அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.4, அ.சா.5 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். காவல் உதவி ஆய்வாளர் அ.சா.6 புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். மதுவிலக்கு அமல் பிரிவில் இரண்டாம் நிலை காவலராக இருந்த அ.சா.1-யை காவல் நிலையத்தில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் எதிரிகள் திட்டி மிரட்டியதாக குறிப்பிட்டுள்ள நிலையில், காவல் நிலையத்தில் பணியில் இருந்த அ.சா.2, அ.சா.3

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:06:24 +0530

ஆகியோர் சண்டையை மறித்ததாக குறிப்பிட்டுள்ள நிலையிலும், எதிரிகள் அந்த சமயத்தில் பிடித்து சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்படவில்லை. அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர் சம்பவ சமயத்தில் பணியில் இருந்ததற்கான ஆவணம் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை. அ.சா.1 ன் பணி என்ன பாதிக்கப்பட்டது என்பது குறித்து சாட்சியம் முன் வைக்கப்படவில்லை. எனவே மேற்படி சாட்சியங்களில் இருந்து எதிரிகள் அ.சா.1-யை தகாத வார்த்தைகளால் திட்டி கையால் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்து பொது பணியை செய்ய விடாமல் தடுத்ததான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள்படியாக 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(1)- ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 323, 353 ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**23. இறுதியாக, 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 353, 506(1)- ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 323, 353 ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:06:31 +0530

24. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 -ம் வெள்ளிக்கிழமை 2026-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:06:39 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.

<u>**இணைப்பு:-**</u>

<u>**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.சிவக்கொழுந்து | காயம்பட்ட சாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.முருகையா | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.சிவக்குமார் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.ராமதாஸ் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | திரு.பாபு | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.6 | திரு.ஆனந்தராசன் காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.06.2021 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 14.06.2021 | முதல் தகவல் அறிக்கை | அ.சா. 6 |
| அ.சா.ஆ.3 | 14.06.2021 | பார்வை மகசர் | அ.சா.6 |
| அ.சா.ஆ.4 | 14.06.2021 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | 14.06.2021 | அ.சா.1 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.6 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.27 17:06:47 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.